


தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்தநாளும் 'சமூக நீதி நாளாக' கடைபிடிக்கப்படும் என்றும், அப்பிறந்தநாள் அன்று 'சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்' என முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, நேற்று காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் கழகத்தினர் ஏராளமானோர் 'சமூக நீதி நாள்' உறுதிமொழி ஏற்றனர். இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ் எம்.பி., கழக செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம், காஜா, பூச்சி எஸ். முருகன், மாவட்டச் செயலாளர்கள் நே. சிற்றரசு, மயிலை த. வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, நந்தனம் கி.மதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் ஏராளமானோர் பங்கேற்று உறுதிமொழி ஏற்றனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் பேரறிஞர் அண்ணாவின் 116வது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாவின் திருஉருவச்சிலைக்கு மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றியசெயலாளர் எஸ்.சண்முகவடிவேல், பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணிநாராயணன், துணைத் தலைவர் கான்முகமது, மாவட்ட சிறுபான்மை நல பிரிவு அமைப்பாளர் என்.எம்.சாக்ளா உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகர கழக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சின்னமனூர் நகரில் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., பேரறிஞர் அண்ணா திருவுருச் சிலைக்கு மாலை அணிவித்தார் உடன் மாவட்ட அவைத் தலைவர் மனோகரன், சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு மற்றும் பஞ்சாப் முத்துக்குமரன், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# ஆயிரமாண்டு மடமைகளைக் களையெடுத்த அறிவியக்கம்! ஆயிரமாண்டுகளுக்கான பாதையைச் செப்பனிடும் தொண்டியக்கம்!

## கழக பவளவிழாவையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, செப். 18 -

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"நான்தான் திராவிடன் என்று நவில்கையில்**

**தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!" எனப் பாவேந்தர் பாடிய உணர்ச்சி தமிழ்நிலமெங்கும் வீச, தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்கிறது! தமிழுக்கு ஒரு இன்னலென்றால் தடுத்து நிறுத்தத் தம்பி மார் படை உள்ளதென்றுதமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள உடன்பிறப்புகளானோம் நாம்!**




**ஆயிரமாண்டு மடமைகளைக் களையெடுத்த அறிவியக்கம்! இன்னும் ஆயிரமாண்டுகளுக்கான பாதையைச் செப்பனிடும் தொண்டியக்கம்! தமிழினத் தலைவர் கலைஞர் கட்டிக்காத்த இந்த இயக்கத்தில் பாடுபடும் அத்தனை பேருக்கும் இந்தத் தலைமைத் தொண்டனின் வாழ்த்துகள்! இன்று மாலை பவள விழா முப்பெரும் விழாவில் உங்களைக் காணக் காத்திருக்கிறேன்...**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி



சென்னை, செப்.18-

பிரதமர் மோடி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்! தாங்கள் நீண்டகாலம் நிலைத்த உடல்நலத்துடன் திகழ்ந்திட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



விருதுநகர், செப்.18-

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (19.09.2024-வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில், மல்லாங்கிணர், இராஜா மணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள்/பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பொருள்:

நாடாளுமன்ற தேர்தலில் 40/40 வெற்றிக்காக நன்றி தெரிவித்தல்

வருகின்ற 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் தி.மு.கழகம் வெற்றி பெற்றிட.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவீத்துள்ளார்.

### இளையான்குடி ஒன்றியம்

# சாத்தனூர் சாலை கிராமத்தில் விலையில்லா மிதிவண்டிகள்!

## திருமதி தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை, செப்.18-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் சாத்தனூர், சாலை கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தமிழக முதல்வரின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில நடைபெற்றது. மாணவ - மாணவிகளுக்கு முதல்வரின் விலையில்லா மிதிவண்டியினை வழங்கி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன் ஒன்றிய செயலாளர்கள் ஆறு. செல்வராஜன், வே. தமிழ் மாறன், கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கண்ணன், நிர்வாகிகள் வே. கருணாகரன், சேவியர், ரவிச்சந்திரன், தயாளன், திலகர், தங்கம், நடராஜன், போஸ் அடைக்கலம், கதிரேசன், கஸ்பார், குணசேகரன், அவைத்தலைவர் கணேசன், தபசு ராஜன், ஒன்றிய கவுன்சிலர்கள் மலையரசி ரவிச்சந்திரன், செல்வி சாத்தையா, சரளா ராஜ்குமார், பழனியம்மாள், உட்பட பெற்றோர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக தலைமையாசிரியர்கள் சுப்பிரமணியம் சண்முகம் ஆகியோர் வரவேற்றார்கள்.




மதுரை தெற்கு மாவட்டம் கள்ளிக்குடி தெற்கு ஒன்றியத்தில் கழகத் தலைவர்–முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக பவள விழா மற்றும் முப்பெரும் விழாவை முன்னிட்டு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், ஒன்றிய செயலாளர் மதன்குமார் தலைமையில் 62 கிளைக் கழகங்களுக்கு கழக இரு வண்ண கொடிக் கம்பங்களை வழங்கி, இரண்டாயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய போது போது எடுத்த படம். உடன் ஒன்றிய, மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.

### கோவை வடக்கு மாவட்டம் - 35வது வட்டக் கழகம் சார்பில்

# கழக பவளவிழா - முப்பெரும் விழா கழகக் கொடியேற்றல்!

## ஆர்.குமரேசன் ஏற்பாட்டில் சோ.துரைப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது!

கோவை,செப்.18-

கோவைடக்கு மாவட்டம், 35வது வட்டக் கழக அலுவலகமான க. மருதமுத்து நினைவு படிப்பகத்தில் 35 வது வட்டக் கழகத்தின் சார்பாக கழகத்தின் பவளவிழா முப்பெரும் விழாவாக 35 வது வட்டக் கழக செயலாளர் ஆர்.குமரேசன் ஏற்பாட்டில், வட்ட கழக அவை தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில், 35 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் முன்னிலையில், முன்னாள் பகுதிச் செயலாளர் கா.மதியழகன், கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

இதில் மூத்த முன்னோடிகள் கா.பொன்னரசு, ஆர். சண்முகம், விக்னேஷ், பாலசுப்பிரமணியம், வெள்ளியங்கிரி, சதீஷ், டேபிள் ராமசாமி, பெஸ்ட் அன்பு, நாகராஜ், புஷ்பா ராஜேந்திரன் மாதேஸ்வரன் முனியப்பன், ஏடிஎம் பழனிச்சாமி, எல்.எம்.டபிள்யூ செல்வம் துரை (எ) சுப்பிரமணியன், ஆர்.கே.குமார், வெற்றிச் செல்வன், குணசேகரன், ஆட்டோ செல்வம், ஆசீர் வாதம்,லலிதா, சோனைச் சாமி ,

கழக நிர்வாகிகள் டி. மணி, குணசீலன், சக்தி, கௌசல்யா, சுமதி புஷ்பா, சங்கர், மணிகண்டன், ஜாகிர் உசேன், சங்கரபாண்டியன், சிராஜுதீன், பிரசன்னா, காளிமுத்து, முருகவேல் தியேட்டர் ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதில் கழகக் கொடி ஏற்றி விண்ணதிர முழக்கங்கள் எழுப்பி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, அதிர்வெட்டுகள் வாண வேடிக்கைகள் முழங்க உற்சாகத்துடன் சிறப்புற முப்பெரும் விழா பொதுமக்கள் முன்னிலையில் கொண்டாடப்பட்டது.

மேலும் கழக மூத்த முன்னோடி வேலாச்சாமி கழகக் கொடியேற்றி சிறப்பித்தார்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கழக நிர்வாகிகளுடன் உறுதிமொழி ஏற்றுக்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் வடிவேல் முருகன், சசிகுமார், மதிவாணன், செங்கிஸ்கான், ஜான், ஒத்தக்கடை சரவணன், தம்பி செந்தில், எஸ்வி மணி, கவியரசு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.